(2022) 3 எஸ்.சி.ஆர். 698

இந்திய உச்ச நீதிமன்றம்

2022-ம் ஆண்டு மே திங்கள் 05ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு.வினீத் சரண்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.ஜே.கே.மகேஸ்வரி

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண்.738/2022

சிறப்பு அனுமதி மனு (கு) எண்.8305/2021-லிருந்து எழுகின்றன

ஜே.சேகர் என்ற சேகர் ரெட்டி ....மேல்முறையீட்டாளர்.

...எதிர்...

அமலாக்கத்துறை இயக்குனரகம் ...எதிர்மேல்முறையீட்டாளர்.

பணமோசடித் தடுப்புச்சட்டம், 2002 பிரிவுகள் 3 மற்றும் 4 – சங்கதிகளின் படி, மேல்முறையீட்டாளரிடமிருந்து நிறைய தொகைக்கு பணத்தாள்கள் மற்றும் தங்கம் கைப்பற்றப்பட்டது - ஊழல் தடுப்புச்சட்டம் மற்றும் இந்திய தண்டனைச்சட்டம் ஆகியவற்றின் கீழும், கூடுதலாக ப.மோ.த.ச படியான அட்டவணை குற்றங்களுக்கும் மேல்முறையீட்டாளர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது - நடவடிக்கையை நசித்துப் போகும் படி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டது - உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது - மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட்டது : குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்கான வாய்ப்பானது மிகவும் பாழ்பட்டது - **ம.பு.து**. அட்டவணை குற்றங்களைப் பொறுத்து பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் முடித்தல் அறிக்கையை தாக்கல் செய்தது - போதிய சாட்சியங்கள் இல்லாததால் அட்டவணை குற்றம் எழவில்லை - ப.மோ.த.ச. படியான வழக்குகளிலும் குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் நிரூபிக்கும் தரமானது

சாத்தியக்கூறுகளின் மேம்பட்ட நிலையிலானதாக இருக்கக்கூடாது மற்றும் சந்தேகத்திற்கிடமின்றி குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவேண்டும் - நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையானது ஜப்தி உத்தரவை உறுதி செய்யாது எவ்வித குறிப்பிட்ட ஆதாரங்களும் இல்லாது குற்றச்சாட்டுகளானது ஊகங்கள் அடிப்படையிலானது என முடிவிற்கு வந்துள்ளது - கைப்பற்றுகை செய்யப்பட்ட பணத்திற்கான வரியானது ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டது - 5 ½ வருடங்கள் கழிந்த பிறகும் துறையால் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி குற்றத்தை நிரூபிக்கும் வகையில் குற்றத்திற்குட்படுத்தும் ஆதாரங்கள் எதையும் சேகரிக்கவும் இயலவில்லை மற்றும் தாக்கல் செய்யவும் இல்லை - வருமான வரிதுறையின் கடிதம் மற்றும் இதர ஆதாரங்களை சரியான முறையில் முன்னோக்காது உயர்நீதிமன்றம் முடிவை பதிவு செய்துள்ளது - இவ்வாறு உயர்நீதிமன்றத்தின் முடிவானது நிலைக்கத்தக்கதல்ல மற்றும் அந்த உத்தரவு நீக்கம் செய்யப்படுகிறது - குற்றவியல் நடைமுறைச்சட்டம், 1973-பிரிவு 482.

மேல்முறையீட்டை அனுமதித்து இந்த நீதிமன்றம் முடிவிற்கு வந்துள்ளது:

தீர்வு: 1.1 வருமான வரிதுறையானது மேல்முறையீட்டாளர் மற்றும் தொடர்புடைய பிற நபர்களின் அதிகாரப்பூர்வ/வணிக வளாகத்தில் சோதனை நடத்தியுள்ளது. பிறகு வருமான வரிதுறை 13.05.2019ஆம் தேதியிட்டமேல்முறையீட்டாளரின் கடிதத்திற்கு 16.05.2019ஆம் தேதியில் கொடுத்த தகவலில் மேல்முறையீட்டாளரின் அதிகாரப்பூர்வ/வணிக வளாகத்தில் கைப்பற்றப்பட்ட பணத்திற்கு 2016-17 நிதியாண்டில் சுயமதீப்பிட்டில் வரி செலுத்தப்பட்டுள்ளது என்ற மேல்முறையீட்டாளரின் விளக்கத்தில் திருப்தியுற்றுள்ளது. ஆகவே உள்ளே புகுந்து செய்யப்பட்ட சோதனையின் மூலம் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் இதர இனங்களின் பேரில் துவக்கப்பட்ட நடவடிக்கையானது இல்லை மற்றும் வருமான வரிதுறை கைப்பற்றுகை குறித்து 2019ம் ஆண்டில் புலன் விசாரணைக்கு பிறகு திருப்தியுற்றுள்ளது. ஆகவே உயர்நீதிமன்றம் பதிவு செய்த குறையுற்ற உத்தரவின் முடிவில் 2000 ரூபாய் இனத்தில் ஆன புதிய பணத்தாள்கள் கைப்பற்றுகை செய்யப்பட்டது என்பது ஏற்கக்கூடியது அல்ல (பத்தி 14)

1.2 **ம.பு.து** பதிவு செய்த அட்டவணை குற்றம் தொடர்பாகவும், ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்கள் அடங்கிய குற்றத்தினால் பெறும் பொருள் தொடர்பான முதல் தகவல் அறிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. வருமான வரிதுறை அளித்த தகவலின் அடிப்படையில் **ம.பு.து** பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்ற நிலையில் அமலாக்கத்துறை இயக்குநரகம் ஈசிஐஆர்/சிஈஇசட்ஓ/19/2016ல் ப.மோ.த.ச. பிரிவுகள் 3, 4 & 8(5) பிரிவுகளின் கீழ் பதிவு செய்துள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கைக்கு பிறகு அமலாக்க இயக்குநரகம் 01.06.2017ல் ப.மோ.த.ச பிரிவு 5(1) படி சொத்தை ஜப்தி செய்து உத்தரவிட்டுள்ளது. அந்த ஜப்தி உத்தரவை உறுதிப்படுத்த அ.கோ.எண்.785/2017ஐ துறையானது நீதிமுறை தீர்வுறுதி ஆள்வை முன்பு தாக்கல் செய்து அது ப.மோ.த.ச. பிரிவு 5(5) படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பேரில் நிராகரிக்கப்பட்டுள்ளது. (பத்திகள் 15, 16)

1.3 வருமான வரிதுறை வழங்கிய அறிக்கை மற்றும் **ம.பு.து** ஆர்சிஎம்ஏ1 2016 0040ல் சமர்ப்பித்த இறுதி முடித்தல் அறிக்கையில் கூறப்பட்ட காரணங்கள் ஆகியவைகளை ஆய்வு செய்ததில் குற்றவியல் வழக்கில் தண்டனை வழங்குவதற்கான வாய்ப்பானது பாழ்பட்டதாக தெரிய வரும் நிலையில் எதிரி பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்ற சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் நீதிமுறை ஆள்வை பிறப்பித்த உத்தரவு மூலம் தெளிவாக தெரிய வருவது ப.மோ.த.ச பிரிவு 2(1) (யூ)ல் சொல்லப்பட்டுள்ள பொருளின் வரையறையானது கைப்பற்றுகை செய்யப்பட்ட தொகையானது தொடர்புடையது மற்றும் உடைமையில் வைத்திருத்தல் மற்றும் கோருரிமை ஆகியவை கபடமற்றதாக இருக்க வேண்டும். இந்த வழக்கில் போதிய சாட்சியமில்லாததால் அட்டவணை குற்றமானது வெளிப்படுத்தப்படவில்லை. நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையானது ப.மோ.த.ச. படியான ஜப்தி உத்தரவை தொடர மறுத்த நேரத்தில் பதிவுறுக்களில் வங்கி அல்லது அதன் அதிகாரிகள் யாரெல்லாம் ஈடுபட்டார்கள் என்பது குறித்த ஆவணம் இல்லை என கருதியுள்ளது. எனவே, கைப்பற்றுகை செய்யப்பட்ட பணத்திற்கான மூலம் குறித்த அடையாளம் இல்லாதது ப.மோ.த.ச. படியான குற்றம் நிகழ்ந்ததன் கணக்கில் வராத பணம் என்று அமலாக்க இயக்குநரக துணை இயக்குநர் விவேகமாக நம்புவதாக அமையாது. அதே நேரத்தில் வருமான வரிதுறையின் 16.05.2019ஆம் தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விபரத்தின்படி கைப்பற்றுகை செய்யப்பட்ட பணத்திற்கு ஏற்கனவே வரி

செலுத்தப்பட்டுள்ளது. எனவே, பண மோசடியில் பயன்படுத்தப்பட்டதிலிருந்து சம்பாதிக்கப்பட்ட அளவு இது அல்ல. பண மோசடி தடுப்புச்சட்டப்படியான வழக்குகளில் கூட நீதிமன்றம் சாத்தியக்கூறுகளின் மேம்பட்ட நிலையின் அடிப்படையில் ஒரு வழக்கை நடத்தக்கூடாது. ப.மோ.த.ச. சட்டத்தின் நோக்கம் மற்றும் காரணங்களின் உரைகளைப் படித்துப் பார்க்கும்போது பண மோசடிகாரர்களுக்கு தடை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட கடுமையான சட்டமாகும். எனவே, நீதிமன்றத்தில் இந்த குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க வேண்டும். மற்றபடி தற்போது நீதிமன்றம் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களின் துணையோடு குற்றச்சாட்டை பார்த்து முதலேற்பான குற்றம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை கண்டுணர வேண்டும். நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாத நிலையிலும் ஆள்வை குற்றச்சாட்டை நிலைநிறுத்தாத நிலையிலும் அந்த நபர் நிரபராதி ஆவார். (பத்தி 18).

1.4 இந்த வழக்கின் சங்கதிகளைப் பார்க்கும்போது ஆர்சிஎம்ஏ1 2016 ஏ0040ல் அட்டவணை குற்றத்தைப் பொறுத்த முடித்தல் அறிக்கையை ஏற்றுக்கொண்டதைப் பொறுத்த விரிவான உத்தரவு மற்றும் அட்டவணைக் குற்றத்தைப் பொறுத்து இரண்டு முதல் தகவல் அறிக்கைகளை உயர் நீதிமன்றம் நசித்துப்போகும்படி செய்தது மற்றும் வருமான வரிதுறையின் 16.05.2019ஆம் தேதியிட்ட கடிதம் மற்றும் 25.02.2019ஆம் தேதியிட்ட நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையின் உத்தரவில் ஈசிஆர் சிஈஇசட்ஓ 19/2016ன் குற்றத்தை தொடர்வதற்கு போதிய சாட்சியமில்லை என்று கருத்தூன்றி உரைக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. 5 ½ ஆண்டுகள் முடிவடைந்த பிறகும் துறையால் குற்றத்திற்குட்படுத்தும் ஆதாரங்களை சேகரிக்க இயலாததும் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாததும் சந்தேகத்திற்கிடமின்றி வழக்கை நிரூபிக்கும் வகையில் இல்லை. முகமை சேகரித்த ஆதாரங்களிலிருந்து அவர்கள் அவர்களுக்குள்ளாகவே ப.மோ.த.ச. படியான குற்றத்தை புரிந்தார்கள் என சந்தேகத்திற்கிடமின்றி முதலேற்பாக திருப்தியுறவில்லை. சங்கதிகளைப் பார்க்கும்போது ப.மோ.த.ச. வகையங்களின் நோக்கங்களுக்கான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வாய்ப்பானது பாழ்பட்டதாக உள்ளது. எனவே, இந்த நீதிமன்றம் அந்த குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் வாய்ப்புகளானது மிகவும் பாழ்பட்டது என்று உறுதியாக கருதுகிறது. ஆகவே, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத வரையில் மேல்முறையீட்டாளர் நிரபராதி என்று சொல்வது சர்வ சாதாரணமானதாகும். உயர்நீதிமன்றத்தின் குறையுற்ற

உத்தரவின் மூலம் பதிவு செய்யப்பட்ட முடிவானது வருமான வரிதுறையின் கடிதம் மற்றும் இதர ஆதாரங்களை சரியான முறையில் முன்னோக்காது பதிவு செய்யப்பட்டதாகும். ஆகவே, உயர்நீதிமன்றத்தின் முடிவானது நிலைக்கத்தக்கதல்ல. உயர்நீதிமன்றம் பிறப்பித்த குறையுற்ற உத்தரவு நீக்கம் செய்யப்படுகிறது. (பத்திகள் 19, 20).

<u>பார்வையிடப்பட்ட தீர் முடிவுகள்</u>

ராதாஷ்யாம் கெஜ்ரிவால் -எதிர்- மேற்கு வங்க மாநில அரசு (2011) 3 **எஸ்சிசி 581: (2011) 4 எஸ்சிஆர் 889**. அஷு சுரேந்திரநாத் திவாரி -எதிர்- காவல்துணை கண்காணிப்பாளர், பொருளாதார குற்றப்பிரிவு, **ம.பு.து** மற்றும் பிறர் **(2020) 9 எஸ்சிசி 636.**

<u>மேற்கோள் தீர் முடிவுகள்</u>

(2011) 4 எஸ்சிஆர் 889 பார்வையிடப்பட்டது பத்தி எண்கள் 17, 18, 19.

(2020) 9 எஸ்சிசி 636 பார்வையிடப்பட்டது பத்தி எண்கள் 17, 19.

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண்.738/2022.

மெட்ராஸ் உயர்நீதிமன்றம் குற்றவியல் அசல் மனு எண்.24200/2017ல் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் உத்தரவின் பேரில் எழுகின்றன.

<u>மேல்முறையீட்டாளருக்காக வழக்குரைஞர்கள்</u> திரு.விக்ரம் சௌத்ரி மூத்த வழக்கறிஞர், திரு.ரிஷி செகல், திரு.எஸ்.இயம் பாரதி, திரு.அப்துல் சலீம், செல்வி/திருமதி.ரியா கண்ணா, செல்வி/திருமதி.ன்ஷு கே.வர்க்கி, வழக்கறிஞர்கள்.

<u>எதிர்மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர்கள்.</u>

திரு.எஸ்.வி.ராஜு, கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர், திரு.எம்.கே. மரோரியா,

திரு.சோகெப் ஹுசைன், திரு.காணு அகர்வால், திருமதி/செல்வி.சாய்ரிகா ராஜு

திருமதி/செல்வி.தீபா பாலி தத்து, திரு.அன்ஷுமாசிங், திரு.அங்கித் பாட்டியா, திரு.அர்பித் கோயல், திரு.ஹர்ஷ்பால், வழக்கறிஞர்கள்.

கீழ்காணும் தீர்ப்பு இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுகிறது.

<u>தீர்ப்புரை.</u>

(1). அனுமதி வழங்கப்பட்டது.

(2). இம்மேல்முறையீடானது மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் ஈராயம் 04.02.2021ஆம் தேதியில் குற்றவியல் அசல் மனு எண்.24200/2017ல் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.2/2017ல் கண்ட நடவடிக்கையை நசித்து போகும்படி தொடரப்பட்டதில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் பேரில் எழுகின்றன. உயர் நீதிமன்றம் குற்றவியல் நடைமுறைச்சட்டம் (சுருக்கமாக கு.வி.ந.ச) பிரிவு 482 படியான மனுவை தள்ளுபடி செய்தபோது இடைநிகழ்வாக அட்டவணை குற்றம் தொடர்பான முதல் தகவறிக்கை போதிய ஆதாரமில்லையென முடிக்கப்பட்டபோது, அட்டவணைக் குற்றத்துடன் தொடர்புபடுத்தும் சாட்சியமில்லாத போது பண மோசடி தடுப்புச்சட்டப் பிரிவுகள் 3 மற்றும் 4 (சுருக்கமாக ப.மோ.த.ச) படியான குற்றஞ்சாட்டுதலும் நிலைக்கத்தக்கதல்ல என்ற மேல்முறையீட்டாளர் தரப்பு வாதத்தை நிராகரித்தது. மேலும் அட்டவணைக் குற்றம் செய்திருக்க வேண்டுமென்பது நடவடிக்கையை தொடர்வதற்கான அடிப்படை முன் நிபந்தனையானது என்றபோதிலும் பணமோசடி குற்றமானது அட்டவணை குற்றங்களிலிருந்து தனித்தது என்றும் ஏனெனில் ப.மோ.த.ச சட்டமானது அந்த குற்றத்தின் மூலம் கிடைத்த தொகையை மறைத்தல், உடைமையாக்குதல், கையகப்படுத்துதல், பயன்படுத்துதல் ஆகியவைகளை உள்ளடக்கிய செயல்முறை அல்லது செயல்பாடுகளையும் கையாள்கிறது என்றும் கருதப்படுகிறது. இருப்பினும் பண மோசடி தடுப்பு சட்டத்தின் பிரிவு 44(1)ன் விளக்கத்தின் மூலம் மேல்முறையீட்டாளரின் வாதம் நிராகரிக்கப்பட்டது. ஏதேனும் குற்றம் நிகழ்ந்ததை தொடர்புபடுத்தும் பொருளில்லை என பிணை மனுவில் ஏதேனும் கவனித்துரைத்திருந்தால், நடவடிக்கையை நசித்து போகும்படி செய்ய போதுமானதாக இருக்காது என்று உயர்நீதிமன்றம் மேலும் கூறியுள்ளது. பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் இனமான பணத்தாள்கள் அரசின் உத்தரவின் பேரில் சட்டச்செலாவணி மதிப்பிழக்கச் செய்யப்பட்டதால் மக்கள் பழைய பணத்தாள்களை மாற்றி புதியனவைகளை பெற வரிசையில் நின்றுகொண்டிருந்தபோது அத்தறுவாயில் 2000 ரூபாய் இனமான தாள்களை வருமான வரித்துறை கைப்பற்றியதை நீதிமன்றம் நம்பியுள்ளது. 33 கோடி ரூபாய் மதிப்புக்கு 2000 ரூபாய் இனமான பணத்தாள்களானது பறிமுதல் செய்யப்பட்டதால் மத்திய புலனாய்வு துறை (சுருக்கமாக "**ம.பு.து**") யால் அட்டவணை குற்றங்களை பொறுத்து தாக்கல் செய்யப்பட்ட முடித்தல் அறிக்கையை நம்பியிருக்க முடியாது.

(2). சுருக்கமாக, மேல்முறையீட்டின் நோக்கத்துடன் தொடர்புடைய சங்கதிகள் என்னவென்றால், மேல்முறையீட்டாளர் ஜே.சேகர் ரெட்டி மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ள

தி/ள் எஸ்.ஆர்.எஸ் சுரங்கம் என்ற கூட்டாண்மை நிறுமத்தின் மேலாண் இயக்குநராக இருந்து 2013ஆம் ஆண்டிலிருந்து அவரின் நிறுமத்தின் மூன்று வங்கிக் கணக்குகளில் 312.64 கோடி ரூபாயை வைப்பீடு செய்துள்ளார். 08.12.2016 மற்றும் 09.12.2016 ஆகிய தேதிகளில் சென்னை, வருமானவரித்துறை (சுருக்கமாக "வருமான வரிதுறை") மேல்முறையீட்டாளர் மற்றும் பிறரின் அதிகாரப்பூர்வ/வணிக வளாகங்களில் சோதனை நடத்தியதில் 106, 98, 89, 800/- ரூபாய் மற்றும் 128.495 கிலோ கிராம் தங்கத்தை (36,72,07,311/- ரூபாய் மதிப்பிலானது) கைப்பற்றியது.

(3). அதன்பிறகு 08.12.2016 முதல் 12.12.2016 வரையில் மேல்முறையீட்டாளர் மேற்படி கைப்பற்றப்பட்ட பணத்தாள்கள் மற்றும் தங்கம் தொடர்பாக வருமான வரிதுறை நடத்திய விசாரணையில் பங்கேற்றார். பின்னர் 19.12.2016ஆம் தேதியில் **ம.பு.து** சென்னை ஆர்சி 40(ஏ) 2016/**ம.பு.து**/ஏசிபி-யில் இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் (சுருக்கமாக இ.த.ச.) 120(பி) உ/இ 409, 420 மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (சுருக்கமாக ஊ.த சட்டம்) பிரிவுகள் 13(2), உ/இ 13(1) (சி) மற்றும் 13(1) (டி)யின் கீழ் மேல்முறையீட்டாளர் மற்றும் பிற இருவர் மீது வழக்கு பதிவு செய்துள்ளது.

(4). அமலாக்கத்துறை இயக்குநரகம் **ம.பு.து**-வின் முதல் தகவலறிக்கையை கருத்தூன்றிவிட்டு அட்டவணை குற்றத்தோடு பணமோசடி தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 2(1)(எக்ஸ்) மற்றும் 2(1)(ஒய்) ஆகிய வகையங்களும் பொருந்தி வருவதாக உணர்ந்தது. இருப்பினும் ஈசிஐஆர்எண் 19/2016ல் 19.12.2016ம் தேதியில் மேல்முறையீட்டாளர் மற்றும் பிறர் மீது குற்றத்தை பதிவு செய்தது. எதிர்மேல்முறையீட்டாளர் விசாரித்து மற்றும் புலன் விசாரணை நடத்தி மேல்முறையீட்டாளர் மற்றும் பிறரின் வாக்குமூலத்தை பதிவு செய்து மேல்முறையீட்டாளரின் அதிகாரப்பூர்வ/வணிக வளாகங்களில் 2000 ரூபாய் இனத்திலான புதிய பணத்தாள்களாக 33,74,92,000 ரூபாயை பின்னர் நடத்திய சோதனையின் வாயிலாக கண்டுபிடித்தது.

(5). இதற்கிடையில் மத்திய புலனாய்வுத்துறை தரப்பில் காவலில் எடுக்க செய்யப்பட்ட மனுவானது சிறப்பு நீதிமன்றத்தின் 30.12.2016 ஆம் தேதியிட்ட உத்தரவின் பேரில் தள்ளுபடி செய்யப்பட்டது. **ம.பு.து** 10 நிமிட இடைவெளிகளில் குற்ற எண்.ஆர்சிஎம்ஏ1 2016ஏ 0051ஐ 15.00 மணிக்கும், ஆர்சிஎம்ஏ1 2016ஏ0052ஐ 1510மணிக்கும் என 2 முதல் தகவல் அறிக்கைகளை பதிவு செய்தது. மேல்முறையீட்டாளர் சென்னை, மத்திய புலனாய்வுத்துறை வழக்குளை விசாரிக்கும் முதன்மை சிறப்பு நீதிபதி

முன்பு ஆர்சிஎம்ஏ1 2016 ஏ0040 மற்றும் ஆர்சி எம் ஏ 1 2016 ஏ 0051 ஆகியவைகளில் பிணை விண்ணப்பங்களை தாக்கல் செய்தார். சிறப்பு நீதிமன்றம் 17.03.2017 ஆம் தேதியிட்ட உத்தரவின்படி மேல்முறையீட்டாளருக்கு சில நிபந்தனைகளை விதித்து பிணை வழங்கியது.

(6). பின்னர் சென்னை அமலாக்க இயக்குநகரத்தின் துணை இயக்குநர் பண மோசடி தடுப்புச்சட்டத்தின் பிரிவு 5(1)ன் கீழான அதிகாரத்தினை செயல்டுத்தி ஈ.சி.ஐ. ஆர்.சி.ஈ.இசட்.ஓ 19/2016ல் தற்காலிக ஜப்தி ஒன்றை ஒரு மாத குறிப்பிட்ட காலத்திற்கு பிறப்பித்தார். அ.கோ.எண்.785/2017ல் மேற்படி தற்காலிக ஜப்தியினை உறுதி செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டை நீதிமுறை தீர்வுறுதி ஆள்வை மேற்படி தற்காலிக ஜப்தி உத்தரவினை உறுதிப்படுத்த மறுத்து அதனை தள்ளுபடி செய்தது. அந்த உத்தரவில் நீதிமுறை தீர்வுறுதி ஆள்வை வங்கி அல்லது வங்கி அதிகாரிகளின் விபரமானது அந்த பதிவுறுவில் இல்லை என்று கூறியது. எந்த வங்கியில் எந்த இன பழைய பணத்தாள்களிலிருந்து புதிய பணத்தாள்களாக எந்த வங்கி அலுவலர் அவ்வாறு மாற்றினார் என்பதற்கு எவ்வித அடையாளங்களும் இல்லாத நிலையில் வங்கி அலுவலர்கள் மூலம் அவ்வாறு பழைய பணத்தாள்களை புதிய பணத்தாள்களாக மாற்றினார்கள் என்று விவேகமான முறையில் துணை இயக்குநர் நம்பியதற்கு எவ்வித மூல ஆதாரங்களும் இல்லை என்றும், மேற்படி சாட்டுரையானது யூகத்தின் அடிப்படையானது என்றும், அது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்றும் கவனித்துரைத்தது.

(7). மேல்முறையீட்டாளரும் அவருடனான பிற உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0051, ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0052 ஆகியவைகளை கு.வி.மு.ச பிரிவு 482 படி மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் குற்றவியல் அசல் மனு எண்கள் 24200 மற்றும் 24202/2017ஐ தாக்கல் செய்து அதனை எதிர்த்ததில் பிறப்பிக்கப்பட்ட 27.06.2018ஆம் தேதிய பொதுவான உத்தரவில் உயர்நீதிமன்றம் பத்தி 32ல் ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0051, ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0052ஐ மேல்முறையீட்டாளர் மற்றும் பிற உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான நடவடிக்கையை நசித்து போகும்படி செய்து ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0040 என்ற முதல் முதல் தகவல் அறிக்கையில் மேற்படி சாட்டுரைகளை துணை குற்றச்சாட்டுகளாகவும் அல்லது முதல் தகவல் அறிக்கையில் இணைத்துக்கொள்ளவும் **ம.பு.து**-வுக்கு சுதந்திரம் அளித்தது.

(8).ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0040 என்ற பிரதான வழக்கில் **ம.பு.து** புலன் விசாரணையை முடித்து கு.வி.மு.ச. பிரிவு 173(2) படியான அதிகாரத்தை செயல்படுத்தி முடித்தல் அறிக்கையை சென்னை **ம.பு.து** வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்ற கூடுதல் அமர்வு நீதிபதி முன்பு தாக்கல் செய்தது. அந்த அறிக்கை 25.09.2020 ஆம் தேதியிட்ட உத்தரவின்படி ஏற்கப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது போதிய ஆதாரங்கள் இல்லாததால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மேற்கொண்ட பங்கினால் குற்றத்திற்குட்படுத்தும் எதுவும் கண்டறியப்படவில்லை என கருத்தூன்றி உரைக்கப்பட்டது. ஆகவே, **ம.பு.து**. பதிவு செய்த மூன்று வழக்குகளில் பிரதான வழக்கான ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0040ல், இறுதி முடித்தல் அறிக்கையை **ம.பு.து**. சமர்ப்பித்து அதை நீதிமன்றம் ஏற்றது என்றும், மீதமுள்ள இரு வழக்குகளான ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0051, ஆர்.சி.எம்.ஏ.1 2016ஏ0052 ஆகியவைகளில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளை அட்டவணை குற்றத்தை பொறுத்தவரையில் நசித்து போகும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

(9). வருமான வரிதுறை செய்த சோதனைகளின் அடிப்படையில் செய்யப்பட்ட புலன் விசாரணையானது இதுவரையில் முடிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் வருமான வரிதுறையில் 11.05.2019 ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் தகவலை நாடினார். அது தொடர்பாக வருமான வரிதுறை 16.05.2019 ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் மேல்முறையீட்டாளரிடமிருந்து, அதனால் கைப்பற்றுகை செய்யப்பட்ட விபரம் குறித்து கூறியது. ரொக்க குறிப்பேட்டில் 2000 ரூபாய் இன எண்ணிக்கை கொண்ட பணத்தாள்களானது தி/ள் எஸ்.ஆர்.எஸ் சுரங்கத்திற்கு சொந்தமானது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிகிறது. அந்த கைப்பற்றுகை செய்யப்பட்ட பணத்தாள்களானது எஸ்.ஆர்.எஸ் சுரங்க நிறுவனத்தால் மணல் விற்பனை செய்த வகையில் கிடைத்த பெறும் பொருளாகும். 2016-2017 நிதியாண்டில் செய்யப்பட்ட சுய வரி மதிப்பீட்டிற்கு முன்பும், பின்பும் செலுத்தப்பட்டுள்ள வரி விபரங்களின்படி மேற்படி ஆள்வை அவ்வாறு கைப்பற்றப்பட்ட பணமானது கணக்கில் வந்த பணம் அல்லது வரி செலுத்தப்பட்ட பணம் என திருப்தியுற்றுள்ளது.

(10). மேல்முறையீட்டாளர் மேற்படி எல்லா சங்கதிகளையும் குறித்து வாதிட்டு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் கு.வி.மு.ச பிரிவு 482ன் படியான அதிகார வரம்பின் கீழ் பண

மோசடி தடுப்புச்சட்டத்தின் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நசித்து போகும்படி வேண்டுரைத்து பின்வரும் பரிகாரங்களை கோரினார்.:-

(i). குற்றவியல் அசல் மனு நிலுவையில் உள்ளபோது சென்னை மாண்பமை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.2/2017ன் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க வேண்டும்.

(ii). சென்னை மாண்பமை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் உள்ள ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.2/2017ன் பதிவுறுக்களை வரவழைத்து அதனை நசித்துப்போகும்படியும் மற்றும் வழக்கின் சூழ்நிலைகளுக்கு பொருத்தமானதாகவும், சரியானதாகவும் இருக்கும் இதர உத்தரவு, உத்தரவுகளை பிறப்பித்து நீதி வழங்கிட வேண்டும்.

04.02.2021 ஆம் தேதியிட்ட குறையுற்ற உத்தரவின் மூலம் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடி செய்தது.

(11). நாங்கள் மேல்முறையீட்டாளரின் அறிவார்ந்த மூத்த வழக்கறிஞர் திரு.விக்ரம் சௌத்ரி மற்றும் எதிர்மேல்முறையீட்டாளருக்காக ஆஜரான கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் திரு.எஸ்.வி.ராஜு அவர்களையும் கேட்டோம்.

(12). மேல்முறையீட்டாளரின் அறிவார்ந்த மூத்த வழக்கறிஞர் பண மோசடி தடுப்புச்சட்டத்தை கொணர வேண்டுமென்றால் அட்டவணை குற்றம் நிகழ்ந்தது என்ற முன் நிகழ்வு இருக்க வேண்டும் என்றும், ஏனெனில், அக்குறிப்பிட்ட குற்றத்திற்கான குற்றச்செயலினால் இன்றியமையாத சொத்து பெறப்பட்டிருக்க வேண்டும் என்றும் வாதிட்டார். நீதிமுறை தீர்வுறுதி ஆள்வை அமலாக்க இயக்குநரகத்தின் துணை இயக்குநரின் உத்தரவிற்கு போதிய சாட்சியமின்மை என்ற காரணத்தால் ஜப்தி உத்தரவை வழங்க மறுத்துள்ளது. ஆனால் பதிவுறுக்களில் உள்ள ஆதாரங்களின்படி பண மோசடி தடுப்புச்சட்டம் பிரிவு 2 (1) (பி) மற்றும் பிரிவு 3 படி குறிப்பிட்டுள்ள பண மோசடி குற்றமானது வெளிப்படுத்தப்படவில்லை. மேலும் பண மோசடி தடுப்புச்சட்டம் பிரிவு 8(1) படி ஜப்தி செய்யப்படக்கூடிய அளவிற்கு பிரிவு 3 படியான குற்றம் நிகழ்ந்துள்ளது அல்லது அந்த குற்றத்தினால் பெற்ற பொருளை அவர் உடைமை கொண்டுள்ளார் என்று மேற்குறிப்பிட்ட ஆள்வை நம்புவதற்கு தகுந்த காரணம் இருந்திருக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. நீதிமுறை தீர்வுறுதி ஆள்வை நடவடிக்கையும், குற்றவியல் நடவடிக்கையும்

ஒன்றுக்கொன்று தனித்தது. ஆனால் ஆள்வை பதிவு செய்த குற்றத்தைப் பொறுத்த ஆதாரங்களானது தொடர்புடைய காரணியாகும். குறிப்பிட்டு சொல்லவேண்டுமெனில் சாட்சியம் இல்லை எனும்போது பணமோசடி தடுப்புச்சட்டப் படியான நடவடிக்கையில் ஆள்வை ஜப்தி நடவடிக்கையை தொடரப்பட வேண்டாம் என்று உளநிறைவு கொளல் வேண்டும். இந்த நீதிமன்றம் ***ராதேஷ்யாம் கெஜ்ரிவால்*** /எதிரிடை/ ***மேற்கு வங்க அரசு*** (2011) 3 எஸ்சிசி 581 மற்றும் ***அஷு சுரேந்திரநாத் திவாரி*** /எதிரிடை/ ***காவல் துணை கண்காணிப்பாளர்,*** பொருளாதார குற்றப்பிரிவு, மத்திய புலனாய்வுத்துறை மற்றும் பிறர் (2020) 9 எஸ்சிசி 636ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புகளை ஆதாரமாக வைத்து வாதிடப்பட்டது.

(13). மாறாக, எதிர்மேல்முறையீட்டாளர் சார்பில் ஆஜராகியுள்ள அறிவார்ந்த கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் திரு.எஸ்.வி.ராஜு அவர்கள் பணமோசடி தடுப்புச்சட்டம் பிரிவு 5(5) படி நீதிமுறை தீர்வுறுதி ஆள்வை பிறப்பித்த உத்தரவானது மேல்முறையீட்டுக்கு உட்பட்டது என்றும், எனவே, நீதிமுறை ஆள்வை பிறப்பித்த உத்தரவும், பதிவு செய்த தீர்வு முடிவும் இந்த வழக்கின் நடவடிக்கையை நசித்துப்போக போதியதல்ல என்றும் வாதிட்டார். அறிவார்ந்த மேல்முறையீட்டாளரின் மூத்த வழக்கறிஞரின் வாதத்தில் முன்னெடுத்து வைக்கப்பட்ட நற்கூறுகளுக்கு மாறானவைகளை பொறுத்து வாதிடும் நிலையில் அறிவார்ந்த கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர் இல்லை.

(14). கற்றறிந்த வழக்கறிஞர்களை கேட்ட பிறகும், இருக்கக்கூடிய ஆதாரங்களை பார்வையிட்ட பிறகும், வருமான வரிதுறை மேல்முறையீட்டாளர் மற்றும் இதர தொடர்புடைய நபர்களின் அலுவல் ரீதியான/வணிக வளாகங்களில் சோதனையிட்டுள்ளது என தெளிவாகிறது. பிறகு வருமான வரிதுறை 16.05.2019 ஆம் தேதியிட்ட தகவலை மேல்முறையீட்டாளரின் 13.05.2019 ஆம் தேதியிட்ட கடிதத்திற்கு பதில் ஆக அளித்துள்ளது. அதில் மேல்முறையீட்டாளரின் அலுவல் ரீதியான மற்றும் வணிக வளாகத்தில் கைப்பற்றுகை செய்யப்பட்ட பணத்திற்கு மேல்முறையீட்டாளர் விளக்கம் அளித்துள்ளார் என்றும், 2016-2017 நிதியாண்டில் சுயமதிப்பீட்டிற்கு வரி செலுத்தப்பட்டுள்ளது என்று மேல்முறையீட்டாளர் விளக்கமளித்துள்ளார் என்று உளநிறைவு கொண்டுள்ளது. அந்த கடிதமானது இதில் மீண்டும் உரைக்கப்பட்டுள்ளது.

"இந்திய அரசு (சி.ப.அ)

வருமான வரித்துறை இணை இயக்குநர் அலுவலகம் (ஐ.என்.வி) அலகு-(1)

அறை எண் 223, 2வது தளம், வருமான வரித்துறை பிரிவு எம்.ஜி சாலை, நுங்கம்பாக்கம்,

சென்னை - 600034, தொலை நகலி:- 044-28253651

கே.ஜி.அருண்ராஜ் @ இன்கம்டாக்ஸ்.ஜி.ஓ.வி.இன்

அலகு 2(1)/2019-20 16.05.2019.

பெறுநர்

மேலாண்மை பங்குதாரர்

தி/ள்.எஸ்.ஆர்.எஸ் சுரங்கம்,

317, எலைட் எம்பயர்,

ஜி,12. வள்ளுவர் கோட்டம் ரஸ்தா,

நுங்கம்பாக்கம்,

சென்னை - 34.

ஐயா,

பொருள்: தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கம் மற்றும் பிறர்-ல் நடந்த சோதனை - தகவல் வழங்க விடுக்கப்பட்ட வேண்டுகோள் - தொடர்பாக.

பார்வை: தங்களின் 01.05.2019ஆம் தேதியிட்ட கடிதம் 13.05.2019 ஆம் தேதியில் பெறப்பட்டுள்ளது.

தயவு செய்து மேலே பார்க்கவும்.

2. தங்களால் வேண்டிக்கொள்ளப்பட்ட விபரம் இதனடியில் புள்ளிவாரியாக கொடுக்கப்பட்டுள்ளது.

(i). தி/ள் எஸ்ஆர்ஸ் சுரங்கம் மற்றும் பிறரின் வழக்கில் சோதனை துவங்கப்பட்ட தேதி 08.12.2016. இந்த அலுவலகம் இந்த வழக்கை மத்தியப் புலனாய்வு துறைக்கு அனுப்பவில்லை. மத்திய புலனாய்வு

துறை தானாக முன்வந்து புதிய 2000ரூபாய் தாள்கள் நிறைய அளவில் கைப்பற்றுகை செய்யப்பட்டதென செய்தி வெளிவந்த பிறகு நடவடிக்கையை துவக்கியுள்ளது.

(ii). கைப்பற்றுகை செய்யப்பட்ட பணம் மற்றும் தங்கம் திரு.எஸ்.ராமச்சந்திரன், திரு.கே.ரெத்தினம், திரு.ஜே.சேகர் ஆகிய பங்குதாரர்களை கொண்ட தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கம் என்ற கூட்டாண்மை நிறுமத்திற்கு பாத்தியப்பட்டது.

(iii). திரு.ஜே.சேகர் அவர்களின் வீட்டில் இருந்து 12,00,000/- ரூபாய் பழைய பணத்தாள்கள் கைப்பற்றுகை செய்யப்பட்டது.

(iv). பல்வேறு வளாகங்களில் புதிய 2000ரூபாய் பணத்தாள்கள் கைப்பற்றுகை செய்யப்பட்ட விபரம் இதனடியில் கொடுக்கப்பட்டுள்ளது:-

வ.எண்.	வரிவிதிப்புக்குரியவரின் பெயர் மற்றும் முகவரி	கைப்பற்றுகை செய்யப்பட்ட புதிய 2000 இனத்திலான ரூபாய்கள் (ரூபாயில்)
1	தி/ள் எஸ்ஆர்ஸ் சுரங்கம், கதவு எண்.36, சுதாமா கட்டிடம், மனை எண்.1, முதல் தளம், பின் தொகுதி, விஜயராகவா ரோடு, தி.நகர், சென்னை - 600017	8,00,00,000
2.	தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கம், 26/14, யோகாம்பை தெரு, தி.நகர், சென்னை-600017	1,63,06,000

3.	தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கம், 3வது தளம், வி.பி.சி. தனிப்பகுதி, கதவு எண்.47 மற்றும் 49, பசுல்லா தெரு, தி.நகர், சென்னை-600017	13,16,000
4.	ஜி.வெங்கடேஷ், வேனு நகையகம், எண்.127, கடை எண்.18, என்.எஸ்.சி.போஸ் தெரு, ஆதிநாத் வளாகம், சௌகார்பேட்டை, சென்னை -600079	11,86,000
5.	கே.உமாபதி, ராயல் இந்தியா, ரத்தினங்கள் மற்றும் நகைகள் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் எண்.226, பழைய எண்.124, கடை எண்.18,19,20, 4வது தளம், ஆதிநாத் வளாகம், சென்னை-600079	1,00,000
6.	தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கம், டாடா ஏசிஇ வாகனம், டிஎன்23பிசி5757	24,00,00,000
	மொத்தம்	33,89,08,000

தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கத்திற்கு சொந்தமான புதிய பணத்தாள்கள் தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கத்தின் ரொக்க குறிப்பேட்டில் இணையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(v). கைப்பற்றுகை செய்யப்பட்ட ஆவணங்களின்படி கைப்பற்றப்பட்ட புதிய பணத்தாள்களுக்கான வருமான மூலமானது தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கத்தால் மணல் விற்பனை செய்ததால் விளைந்ததாகும்.

(vi). தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கத்தில் சோதனை நடவடிக்கைக்கு முன்பே செலுத்தப்பட்ட வரி சம்பந்தமான விபரம் இதனடியில் கொடுக்கப்பட்டுள்ளது:-

வ.எண்	வரிவிதிப்பு வருடம்	முன் வரி (ரூபாயில்)	மூலத்தில் கழிக்கப்பட்ட வரி/மூலத்தில் சேகரிக்கப்பட்ட (ரூபாயில்)	முன்னதாக செலுத்தப்பட்ட மொத்த வரி செலுத்தப்பட்டது (ரூபாயில்
1.	2016-17	12,00,00,000	58,35,283	12,58,35,283
2.	2017-18	18,00,00,000	42,98,471	18,42,98,471
			மொத்தம்	31,01,33,754

2016-17 நிதியாண்டின் தொடர்புடைய 2017-18 வரிவிதிப்பு ஆண்டில் தி/ள் எஸ்ஆர்எஸ் சுரங்கம் சோதனைக்கு முன்பே சுயமதிப்பீட்டில் 22,00,00,000/- ரூபாயை செலுத்தியுள்ளது.

தங்கள் உண்மையுள்ள,

(கே.ஜி.அருண்ராஜ்,இ.வ.ப)
வருமான வரித்துறை இணை இயக்குநர், (புலனாய்வு)
(சிறப்பு பணி அலுவல்) அலகு 2(1), சென்னை"

எனவே உள்ளே புகுந்து கைப்பற்றுகை செய்யப்பட்ட பணம் மற்றும் இதர பொருள் ஆகியவைகள் படி ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையானது இல்லை மற்றும் வருமான வரிதுறையால் 2019ம் ஆண்டு வசூலிக்கப்பட்டது என்று புலன் விசாரணைக்கு பிறகு திருப்தி அடைந்துள்ளது. எனவே உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட குறையுற்ற உத்தரவின்

பத்தி 14ல் 2000 ரூபாய் இன எண்ணிக்கையிலான புதிய பணத்தாள்கள் கைப்பற்றுகை செய்யப்பட்டது என்பது எண்ணம் கொள்ளப்படவில்லை.

(15). இந்த வழக்கில் உள்ள பிரச்சனைக்கு திரும்புகையில், **ம.பு.து** பதிவு செய்த பிரதான முதல் தகவல் அறிக்கை ஆன ஆர்சி எம்ஏ1 2016 ஏ0040 மற்றும் அதன்பிறகான இரண்டு வழக்குகளான ஆர்சிஎம்ஏ1 2016 ஏ0051 மற்றும் ஆர்சிஎம்ஏ1 2016 ஏ0052 ஆகியவைகள் வருமான வரிதுறை வழங்கிய தகவலினை அடிப்படையாக கொண்டதாகும். மேலேகண்டவாறு விவாதித்தபடி ஆர்சிஎம்ஏ1 2016 ஏ0051 மற்றும் ஆர்சிஎம்ஏ1 2016 ஏ0052 வழக்குகளானது உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் அசல் மனு எண்.409/2017ல் 27.06.2018ஆம் தேதியிட்ட உத்தரவின் படி நசித்து போகும்படி செய்யப்பட்டுவிட்டது. அதன் பிறகு மத்திய புலனாய்வுத் துறை பிரதான முதல் தகவல் அறிக்கையான ஆர்சிஎம்ஏ1 2016ஏ 0040ல் முடித்தல் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. 25.09.2020ஆம் தேதியில் நீதிமன்றம் கு.வி.மு.ச பிரிவு 173(2) படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பேரில் அந்த முடித்தல் அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்படி முடித்தல் அறிக்கையில் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள தொடர்புடைய எடுகுறிப்பு இதனடியில் மீண்டும் உரைக்கப்பட்டுள்ளது.

> "சென்னை, ஏசிபி மத்தியபுலனாய்வுத் துறையின் காவல் ஆய்வாளர் மத்திய புலனாய்வுத் துறையின் மூத்த அரசு வழக்குரைஞரின் மூலம் இறுதி அறிக்கையை சமர்ப்பித்து அதன் மூலம் ஆர்சிஎம்ஏ1 2016 ஏ0040ல் இதச பிரிவுகள் 120 (பி) உ/இ 409, 420 மற்றும் ஊழல் தடுப்புச்சட்டம், 1989ன் பிரிவுகள் 13(2) உ/இ 13(1)(சி)(டி) படியான நிலுவையில் உள்ள முதல் தகவல் அறிக்கையை முடித்துக்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்க பிரார்த்திக்கப்பட்டுள்ளது.....
>
> (3). இந்த நீதிமன்றம் முதல் தகவல் அறிக்கை, கு.வி.மு.ச பிரிவு 161 படி பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குமூலங்கள், புலன் விசாரணை அதிகாரியால் புலன் விசாரணையின் போது சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் படி தாக்கல்செய்யப்பட்ட முடித்தல் அறிக்கையினை ஏற்குமாறு இந்நீதிமன்றத்தில் தயவுகூர்ந்துவேண்டப்பட்டுள்ளது மற்றும் போதிய சாட்சியங்கள்

இல்லாததால் குற்றச்சாட்டப்பட்ட 1 முதல் 6 பேர்கள் மீதான நடவடிக்கையை கைவிடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

எனவே குற்றஞ்சாட்டப்பட்ட 1 முதல் 6 நபர்கள் அடையாளம் தெரியாத வங்கி அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்களுடன் சதி ஆலோசனை செய்து இந்திய அரசாங்கத்தை ஏமாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு எவ்வித வெளிப்படுத்தக்கூடிய முகாந்திரமும் இல்லை.

(4). குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடமிருந்து அங்கீகரிக்கப்படாத பணத்தை பழைய பணத்தாள்களில் இருந்து புதிய பணத்தாள்களாக மோசடியாக மாற்றினார்கள் என்று வழக்கு தொடரப்படக்கூடிய அளவிற்கான வழக்குக்கு சாட்சியம் போதுமானதாக இல்லை என்று பதிவுறுக்களிலிருந்து தெரிய வருகிறது என்றும், அதனால் பொதுமக்களின் உரிமையை இழந்துவிட்டார்கள் என்றும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட 1 முதல் 6 பேர்கள் அடையாளம் தெரியாத வங்கி அதிகாரிகள், மற்றும் பொது ஊழியர்களுடன் சதி ஆலோசனை செய்து இந்திய அரசாங்கத்தை ஏமாற்றிவிட்டார்கள் என்பதற்கு போதிய சாட்சியம் இல்லை.

(6). 1 முதல் 6 குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கெதிரான புலன் விசாரணையானது குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்தவில்லை. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 170ன் வாக்குமூலங்கள் மற்றும் தற்காப்பு ஆவணங்கள் 1 முதல் 879 மற்றும் சான்றுப்பொருட்கள் 1 முதல் 8 ஆகியவைகள் புலன் விசாரணையின் போது சேகரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் குற்ற சதி ஆலோசனை, மோசடி, குற்ற தவறான நடத்தை போன்ற குற்றங்களுக்கு வழக்கு தொடரக்கூடிய அளவிற்கு போதிய சாட்சியம் இல்லை.

(7). குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்திய அரசாங்கத்திற்கு உத்தேசமாக 247.13 கோடி ரூபாயை தவறான இழப்பு ஏற்படுத்தியும் மற்றும் அவர்களுக்குள் தவறான ஆதாயத்தை அதன் தொடர்பாக பெற்றுக்கொண்டதாகவும் முதல் தகவல் அறிக்கையில்

சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியப்படி குற்ற வழக்கை தொடரக்கூடிய அளவிற்கான சாட்சியமாக நிலைக்கத்தக்கதாக இல்லை. ஆகவே மேற்படி வழக்கை முடிக்குமாறு பரிந்துரை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(8).....ஆகவே இந்த நீதிமன்றம் வழக்கை முடிக்குமாறு பிராத்திக்கப்பட்டதை ஏற்க உளநிறைவு கொள்கிறது மற்றும் நம்புகிறது....

(9). .....சாட்சியங்கள் இல்லாத நிலையில் முதல் தகவல் அறிக்கையை முடிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ள காரணங்கள் ஏற்கக்கூடியதாக உள்ளது."

ஆகவே, அட்டவணை குற்றங்களைப் பொறுத்து **ம.பு.து**. குற்றத்தினால் கிடைத்த பெறும் பொருளைப் பொறுத்து பதிவு செய்த முதல் தகவல்அறிக்கை மற்றும் ஜப்தி செய்யப்பட்ட சொத்து குறித்த நடவடிக்கையானது முடிக்கப்பட்டுவிட்டது என்பது தெளிவாகிறது.

(16). வருமான வரிதுறை கொடுத்த தகவலின் அடிப்படையிலும், **ம.பு.து** முதல் தகவல் அறிக்கையை முடித்ததாலும் அமலாக்க இயக்குநரகம் பணமோசடி தடுப்புச்சட்டப் பிரிவுகள் 3,4 மற்றும் 8(5) படி ஈசிஐஆர்/சிஈஇசட்ஓ/19/2016ல் பதிவு செய்துள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கைக்கு பிறகு அமலாக்க இயக்குநகரத்தின் துணை இயக்குநர் பணமோசடி தடுப்புச்சட்டத்தின் பிரிவு 5(1) படி சொத்தை ஜப்தி செய்து உத்தரவிட்டுள்ளார். அந்த ஜப்தி உத்தரவை உறுதிசெய்ய துறையால் தாக்கல் செய்யப்பட்ட அ.கோ.எண் 785/2017 ஆனது நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையினால் பணமோசடி தடுப்புச் சட்டம் பிரிவு 5(5)ன் படியான அதிகாரத்தின் பேரில் நிராகரிக்கப்பட்டது. நீதிமுறை தீர்வுறுதி ஆள்வை அமைப்பு இவ்வாறு கருத்தை ஒன்றை உரைத்துள்ளது.:-

"17.03.2017ம் தேதியிட்ட பிணை உத்தரவானது பிறப்பிக்கப்பட்டு 2 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததிலிருந்து 2 ஆண்டுகளுக்கும் மேலாக முடிவடைந்துள்ள நிலையிலும் இருப்பினும் இதுநாள் வரையிலும் அட்டவணை குற்றங்களை புலன் விசாரணை செய்த புலன்

விசாரணை அதிகாரி எவ்வித இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானது. மிகவும் முக்கியமான சங்கதி யாதெனில் அட்டவணை குற்றத்திற்கென புலன் விசாரணை செய்யும் போது சென்னை, அமலாக்க இயக்குநரகத்தாலோ, புலன் விசாரணை அதிகாரியாலோ இதுவரையில் வங்கியையோ, வங்கி அதிகாரிகளையோ அடையாளம் காணப்படவில்லை. வங்கி அல்லது வங்கி அதிகாரிகள் அடையாளம் காணப்படாத நிலையில் துணை இயக்குநரால் அவ்வாறான அடையாளம் காணப்படாமை மற்றும் இல்லாமை குறித்து யோசிக்க வேண்டியது தேவைப்படக்கூடியதாகும். பண மதிப்பிழப்பு மூலம் பழைய பணத்தாள்களை புதிய பணத்தாள்களாக அதிகாரம் அளிக்கப்படாது மாற்றுவதற்கு எந்த வங்கி அல்லது வங்கியின் அதிகாரிகள் ஈடுபட்டார்கள் என்பதைப் பொறுத்து பதிவுறுக்களில் எதுவும் இல்லை அல்லது சேர்க்கப்படவில்லை. எந்த வங்கி அல்லது வங்கி அதிகாரிகள் அவ்வாறு இருந்தார்கள் அல்லது கண்டுபிடிக்கப்பட்டார்கள் என்ற முக்கியமான அம்சமான சங்கதியைப் பொறுத்து துணை இயக்குநர் யோசிக்கவே இல்லை என்பது துணை இயக்குநரின் விவேகமான நம்பிக்கையாக உள்ளது. விவேகமான நம்பிக்கையானது இவ்வாறாக சிதைந்துள்ளது. துணை இயக்குநரால் முடிவிற்கு வந்த விவேகமான நம்பிக்கை யாதெனில் இடை நிகழ்வாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அவர்களது கணக்கில் வராத பணத்தொகையை பல்வேறு வங்கி அதிகாரிகளுடன் சதி ஆலோசனை செய்து அதன் மூலம் அவர்களுடைய கணக்கில் வராத பணத்தை மோசடி செய்வதற்கு அவர்கள் உதவி செய்துள்ளார்கள் என்பதாகும். துணை இயக்குநர் சொல்லியுள்ள படி பல்வேறு வங்கிகள் என்பதில் ஒரு வங்கியின் பெயரைக்கூட பதிவுறுக்களில் சொல்லி தெரியப்படுத்தவில்லை அதேபோல பதிவுறுக்களில் ஒரு வங்கியின் அதிகாரி கூட அடையாளம் காணப்படவில்லை அல்லது பெயர் குறிப்பிடப்படவில்லை மற்றும் அதுபோன்ற விபரம் ஏதும் இல்லை.

உடன் விளைவாக அந்த விவேகமான நம்பிக்கையானது அடிப்படையற்றதாக ஆகிவிட்டது மற்றும் துணை இயக்குநரின் யூகத்தின் அடிப்படையிலானது அந்த நம்பிக்கையானது நியாயமானதல்ல மற்றும் நிலைக்கக்கூடியதல்ல. வங்கி மற்றும் வங்கி அதிகாரிகளை அடையாளம் காணாததும் அவர்களின் இல்லாமையும் விவேகமான நம்பிக்கையினை உருவாக்கியதற்கான அடி வரை செல்கிறது. கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர்/துணை இயக்குநர் அமலாக்க இயக்குநரக அதிகாரிகளை வங்கி அல்லது வங்கி அதிகாரிகள் குறித்து விசாரித்திருக்கவேண்டும் என்று ஏவுரைத்திருக்கவேண்டும். இந்தப் பிரச்சனையில் துணை இயக்குநர் ஆழ்ந்து ஆராய்ந்தறிந்து அதன்படி நடந்திருக்கவேண்டும். அவ்வாறு நடக்கவில்லை.குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பல்வேறு வங்கி அதிகாரிகள் உதவியோடு அவர்களின் கணக்கில் வராத பணத்தை மோசடி செய்தார்கள் என்று துணை இயக்குநர் முடிவிற்கு வந்த விவேகமான நம்பிக்கைக்கு எவ்வித அடிப்படையான ஆதாரங்களும் இல்லாத நிலையில் துணை இயக்குநரின் விவேகமான நம்பிக்கையானது சட்டப்படி ஏற்க முடியாததாகும்.

துணை இயக்குநரின் தற்காலிக ஜப்தி உத்தரவின் பத்தி 21,26 மற்றும் 27ல் கூறப்பட்டுள்ள விவேகமான நம்பிக்கைக்கான அடிப்படையிலான பகுப்பாய்வானது கைப்பற்றுதல் செய்யப்பட்ட 33,47,92,000 ரூபாயில் அட்டவணை குற்றத்தில் தொடர்புடைய அசையும் சொத்துக்களில் எந்த பங்கினைப் பொறுத்ததென குறிப்பிடாததாக உள்ளது.

விவேகமான நம்பிக்கைக்கான அடிப்படையிலானது கைப்பற்றுகை செய்யப்பட்ட தொகையின் ஒரு பகுதியைப் பொறுத்ததாக மட்டிலும் உள்ளதாலும் மற்றும் கைப்பற்றப்பட்ட முழுத்தொகையையும் பொறுத்து ஜப்தி உத்தரவானது இல்லாததாலும் அந்த விவேகமாக நம்பிக்கையானது முழுவதுமாக சீர்குலைந்துவிட்டதாக உள்ளது. விவேகமான நம்பிக்கையில் இருந்து பார்க்கும்போது அந்த

பயிற்சியானது துணை இயக்குநரால் செய்யப்படவில்லை. திரு.ஜே.சேகர்ரெட்டி, எம்.பிரேம்குமார், எஸ்.ஸ்ரீனிவாசலு, எஸ்.ராமச்சந்திரன் மற்றும் கே.ரெத்தினம் ஆகியோர்களிடமிருந்து வருமான வரித்துறை ஆள்வை கைப்பற்றிய புதிய பணத்தாள்களானது பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்குள்ளாக்கப்பட்ட பழைய பணத்தாள்களை மாற்றுவதற்கான செயலை உள்ளடக்கியது என்று விவேகமான நம்பிக்கைக்கான அடிப்படையாக துணை இயக்குநர் கொண்டு வந்துள்ளதற்கு எவ்வித குறிப்பிட்ட ஆதாரமும் இல்லை, நியாயமும் இல்லை. ஆகவே துணை இயக்குநர் இவ்வகையில் செய்துள்ள விவேகமான நம்பிக்கையானது நிலைக்கத்தக்கதல்ல என்ற முடிவிற்கு வந்து அது எவ்வித குறிப்பிட்ட ஆதாரங்களின் அடிப்படையிலானது அல்ல மற்றும் அவை யூகம், உத்தேசயூகம், வெறும் அனுமானம் ஆகியவற்றின் பேரிலானது.

அ.கோ ஆதாரங்கள், எழுத்துப்பூர்வமான பதில்கள்/எழுத்துப்பூர்வமான கூடுதல் பதில்/பிரதிவாதிகளின் விவாத உரைகள் ஆகிய மேற்குறிப்பிட்டவைகளின் அடிப்படையில் தற்காலிகமாக பற்றுகை செய்யப்பட்ட 12.06.2017ஆம் தேதியிட்ட பிஏஓ எண்.14/2017ல் கண்ட பி.ஏ.ஓ பக்கம் எண் 22ல் (இந்த உத்தரவின் பத்தி 1) குறிப்பிடப்பட்டுள்ள 13,96,88,246 ரூபாய் மதிப்பிலான 49.480 கிலோகிராம் தங்கம் ஆனது பணமோசடியில் ஈடுபட்டதில்லை என்று நான் கண்டறிகிறேன்."

(17). அந்த பின் தொடர்பான சங்கதிகளின் படி மேற்குறிப்பிட்ட ***ராதாஷ்யாம் கெஜ்ரிவால்*** (மேலேகண்டவாறு) வழக்கின்படியான சட்ட நிலைப்பாடானது தொடர்புடையது என்பதால் இந்த நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் இப்பிரச்சினை சம்பந்தமான குறிப்பிட்டுள்ள முடிவுகளின் அகவுரையின் படி இவ்வாறு கருத்துன்றி உரைக்கிறது.

"12 பல தீர்ப்புரைகளை மேற்கோள் காட்டி இந்த நீதிமன்றம் அந்த வழக்குகளின் முடிவுகளின் அகவுரைகளிலிருந்து கொணர்வது

என்னவென்றால் **(ராதாஷ்யாம் கெஜ்ரிவால்)** வழக்கின் பத்தி 38 ஆனது பின்வருமாறு உள்ளது.

38. அந்த முடிவுகளில் இருந்து வெளிக்கொணரக்கூடிய அகவுரையானது நெடிவாக கீழ்க்காணுமாறு சொல்லப்படுகிறது:-

(i). நீதிமுறை தீர்மானிப்பு நடவடிக்கையும், குற்ற வழக்கீட்டையும் ஒரே நேரத்தில் தொடரப்படலாம்.

(ii). குற்றவியல் வழக்கு தொடர்வதற்கு முன்பு நீதிமுறை தீர்மானிப்பு நடவடிக்கையின் முடிவானது அவசியமானது அல்ல.

(iii). நீதிமுறை தீர்மானிப்பு மற்றும் குற்றவியல் நடவடிக்கை ஆகியவை ஒன்றுக்கொன்று தனித்த தன்மையுடையதாகும்.

(iv). நீதிமுறை தீர்மானிப்பு நடவடிக்கையில் அந்த குற்ற நடவடிக்கையை சந்தித்தவருக்கு எதிராக தீர்முடிவு இருக்குமேயானால் அது குற்றவியல் குற்றதொடர்வு நடவடிக்கையினை கட்டுப்படுத்தாது.

(v). அமலாக்க இயக்குநகரத்தின் நீதிமுறை தீர்மானிப்பு நடவடிக்கையானது தகுதி வாய்ந்த நீதிமன்றத்தில் தொடரக்கூடிய குற்றத்தொடர்வு ஆகாது மற்றும் அது அரசியலமைப்புச்சட்டத்தின் ஷரத்து 20(2) படியோ, குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் பிரிவு 300 படியோ பொருந்துவது கிடையாது.

(vi). விசாரணையை சந்திக்கக்கூடிய நபருக்கு ஆதரவாக நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையின் நடவடிக்கையானது ஒத்த மீறல் குறித்ததாகின் அது அந்த முடிவின் தன்மையைப் பொறுத்ததாகும். நற்கூறுகளின் காரணங்கள் அல்லாது தொழில்நுட்ப காரணங்களின் அடிப்படையில் நீதிமுறை தீர்மானிப்பால் ஏதேனும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டால் வழக்கு தொடர்வை தொடரலாம்.

(vii). நற்கூறுகளின் அடிப்படையில் எவ்வாறாகின் குற்றச்சாட்டானது நிலைக்கத்தக்கதல்ல என்று பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் அதே சங்கதிகளின் அடிப்படையில் மற்றும் சூழ்நிலைகளின் படி ஒரு நிரபராதிக்கு எதிராக குற்ற வழக்கு தொடர்வை தொடர்வது அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் குற்றவியல் வழக்கு நடவடிக்கையில்

சான்றிற்கான தரமானது உயர்தரமானது என்ற அடிப்படைக் கொள்கையிலானதாகும்.

(13). ராதாஷ்யாம் கெஜ்ரிவால் வழக்கில் இறுதியான முடிவில்

"39 நீதிமுறை தீர்மானிப்பு நடவடிக்கை மற்றும் வழக்கு தொடர்வு நடவடிக்கை ஆகியவை ஒத்ததா அல்லது நீதிமுறை தீர்மானிப்பு நடவடிக்கையில் அதன் தொடர்பான நபர்கள் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டது நற்கூறுகளின் பேரிலானதா என்பதை பொறுத்த ஒப்பீட்டுத்தரம்தான் தீர்மானிக்கும். சட்ட வகையங்களின் மீறல் ஏதும் இல்லை என்று நற்கூறுகளின் அடிப்படையில் நீதிமுறை தீர்மானிப்பு நடவடிக்கையில் தெரியவந்தால் வழக்கு விசாரணையை அந்நபர் சந்திப்பதானது நீதிமுறை நடைமுறையினை துஷ்பிரயோகம் செய்வதாகும்.

(14). எங்களின் பார்வையில். மேற்படி பத்தி 38 (vii) ஆனது முக்கியமானது மற்றும் உயர்நீதிமன்றம் மத்திய ஊழல் தடுப்பு ஆணையத்தின் அறிக்கையினை படித்துப் பார்த்துவிட்டு அது இதே ஒத்த சங்கதிகளின் படி இருப்பதால் இந்த அளவுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் கண்டிப்பாக விடுவிக்கப்பட வேண்டும் என்ற முடிவிற்கு வந்துள்ளது."

அஷு சுரேந்திரநாத் திவாரி (மேலேகண்ட) வழக்கில் **ராதாஷ்யாம் கெஜ்ரிவால்** (மேலேகண்ட) வழக்கினை நிலைநிறுத்தி உயர்நீதிமன்றத்தின் உத்தரவினை ரத்து செய்து குற்றவியல் வழக்கில் ஒத்த சங்கதிகளின் அடிப்படையில் தண்டனை கொடுக்க வாய்ப்பானது பாழ்பட்டுவிட்டது.

(18). மேற்குறிப்பிட்ட சட்ட நிலைப்பாடு மற்றும் வருமான வரிதுறையின் அறிக்கையை ஆய்வு செய்தது மற்றும் நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையின் உத்தரவு மற்றும் **ம.பு.து**-ன் ஆர்சிஎம்ஏ1 2016ஏ 0040ல் சமர்ப்பித்த முடித்தல் அறிக்கை ஆகியவைகளிலிருந்து தெளிவாக தெரியவருவது பண மோசடி தடுப்புச்சட்டத்தின் பிரிவு 2(1) (யூ)ல் சொல்லப்பட்டுள்ள பொருளின் வரையறையானது கைப்பற்றுகை செய்யப்பட்ட தொகையானது தொடர்புடையது மற்றும் உடைமையில் வைத்திருத்தல் மற்றும் கோருரிமை ஆகியவை கபடமற்றதாக இருக்கவேண்டும். இந்த வழக்கில் போதிய சாட்சியம்

இல்லாததால் அட்டவணை குற்றமானது வெளிப்படுத்தப்படவில்லை. நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையானது பண மோசடி தடுப்புச்சட்ட படியான ஜப்தி உத்தரவை தொடர மறுத்த நேரத்தில், பதிவுறுக்களில் வங்கி அல்லது அதன் அதிகாரிகள் யாரெல்லாம் ஈடுபட்டார்கள் என்பது குறித்த ஆவணம் இல்லையென கருதியுள்ளது. எனவே கைப்பற்றுகை செய்யப்பட்ட பணத்திற்கான மூலம் குறித்த அடையாளம் இல்லாதது, பணமோசடி தடுப்புச்சட்டப்படியான குற்றம் நிகழ்ந்ததன் கணக்கில் வராத பணம் என்று அமலாக்க இயக்குநரகத்தின் துணை இயக்குநர் விவேகமாக நம்புவதாக அமையாது. அதே நேரத்தில் வருமான வரிதுறையின் 16.05.2019 ஆம் தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விபரத்தின் படி கைப்பற்றுகை செய்யப்பட்ட பணத்திற்கு ஏற்கனவே வரி செலுத்தப்பட்டுள்ளது. எனவே பண மோசடியில் பயன்படுத்தப்பட்டதிலிருந்து சம்பாதிக்கப்பட்ட அளவு இது அல்ல. பணமோசடி தடுப்புச்சட்டப்படியான வழக்குகளில் கூட நீதிமன்றம் சாத்தியக்கூறுகளின் மேம்பட்ட நிலையின் அடிப்படையில் ஒரு வழக்கை நடத்தக்கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். பணமோசடி தடுப்புச்சட்டத்தின் நோக்கம் மற்றும் காரணங்களின் உரைகளை படித்துப்பார்க்கும் போது பணமோசடிக்காரர்களுக்கு தடை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட கடுமையான சட்டம் ஆகும். எனவே நீதிமன்றத்தில் இந்த குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவேண்டும். மற்றபடி தற்போது நீதிமன்றம் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களின் துணையோடு குற்றச்சாட்டைப் பார்த்து முதலேற்பான குற்றம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டுணர வேண்டும். நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாத நிலையிலும், ஆள்வை குற்றச்சாட்டை நிலைநிறுத்தாத நிலையிலும் அந்த நபர் நிரபராதி ஆவார். மேற்குறிப்பிட்ட பின்னணியில் **ராதாஷ்யாம் கெஜ்ரிவால்** (மேலேகண்டவாறு) பத்தி 38 (vi) மற்றும் (vii)ல் சொல்லப்பட்டுள்ள அகவுரையானது தற்போதைய இந்த வழக்கு சங்கதிகளுக்கு சரியாக பொருந்துகிறது.

(19). மேலேகண்டவாறு விவாதித்தபடி, இந்த வழக்கின் சங்கதிகளைப் பார்க்கும்போது ஆர்சிஎம்ஏ1 2016ஏ 0040ல் அட்டவணைக் குற்றத்தைப் பொறுத்த முடித்தல் அறிக்கையை ஏற்றுக்கொண்டதை பொறுத்த விரிவான உத்தரவு மற்றும் அட்டவணைக் குற்றத்தைப் பொறுத்த இரண்டு முதல் தகவல் அறிக்கைகளை உயர்நீதிமன்றம் நசித்துப் போகும்படி செய்தது மற்றும் வருமான வரிதுறையின் 16.05.2019 ஆம் தேதியிட்ட கடிதம் மற்றும் 25.02.2019 ஆம் தேதியிட்ட நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையின் உத்தரவில் ஈசிஆர்

சிஈஇசட்ஓ 19/2016ன் குற்றத்தை தொடர்வதற்கு போதிய சாட்சியம் இல்லை என்று கருத்தூன்றி உரைக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. 5 1/2 ஆண்டுகள் முடிவடைந்த பிறகும் துறையால் குற்றத்திற்குட்படுத்தும் ஆதாரங்களை சேகரிக்க இயலாததும் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாததும் சந்தேகத்திற்கிடமின்றி வழக்கை நிரூபிக்கும் வகையில் இல்லை. முகமை சேகரித்த ஆதாரங்களில் இருந்து அவர்கள் அவர்களுக்குள்ளாகவே பணமோசடி தடுப்புச்சட்டப்படியான குற்றத்தை புரிந்தார்கள் என சந்தேகத்திற்கிடமின்றி முதலேற்பாக திருப்தியுறவில்லை. நீதிமுறை தீர்வுறுதி ஆள்வையின் உத்தரவிற்கெதிராக மேல்முறையீட்டு நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்ற அறிவார்ந்த கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞரின் வாதமானது எவ்வித உதவிகரமாக இருக்கக்கூடியது இல்லை, ஏனெனில் மேல்முறையீட்டு ஆள்வையின் உத்தரவிற்கு எதிராக தீர்வழி உள்ளது. இவ்வாறு சங்கதிகளைப் பார்த்து மேற்குறிப்பிட்டவாறு விவாதித்தபடியும் **ராதாஷ்யாம் கெஜ்ரிவால் (மேலேகண்டவாறு) மற்றும் அஷு சுரேந்திரநாத் திவாரி** (மேலேகண்டவாறு) ஆகிய வழக்குகளில் இந்நீதிமன்றம் சொல்லியுள்ள அகவுரைகளின் படியும் பணமோசடி தடுப்புச்சட்ட வகையங்களின் படி குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வாய்ப்பானது இந்நீதிமன்றத்தில் பாழ்பட்டுள்ளது. ஆகவே மேற்படி குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் நிரூபிக்கும் வாய்ப்பானது மிகவும் பாழ்பட்டுள்ளது என்று உறுதியாக நாங்கள் கருதுகிறோம். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத வரையில் மேல்முறையீட்டாளர் நிரபராதி என்று சொல்வது சர்வ சாதாரணமானதாகும். உயர்நீதிமன்றத்தின் குறையுற்ற உத்தரவின் மூலம் பதிவு செய்யப்பட்ட முடிவானது வருமான வரிதுறையின் கடிதம் மற்றும் இதர ஆதாரங்களை சரியான முறையில் முன்னோக்காது பதிவு செய்யப்பட்டதாகும். ஆகவே எங்களின் பார்வையில் உயர்நீதிமன்றத்தின் முடிவானது நிலைக்கத்தக்கதல்ல.

(20). ஆகவே உயர்நீதிமன்றத்தின் குறையுற்ற உத்தரவை நாங்கள் நீக்கம் செய்கிறோம். விளைவாக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. ஈசிஆர்சிஈஇசட்ஓ19/2016 உள்ளடங்கிய எண்.2/2017 என்ற முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு

உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "